DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**OS.No. 191/2021**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மதார் முகைதீன் **Pw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of December 2024.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 10 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) 22.01.2021ம் தேதி பிராது தபசில் சொத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள கிரைய ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆகும். 2) 01.10.1997ம் தேதி பிராது தபசில் வீட்டிற்கு வாதி செலுத்திய தீர்வை ரசீது அசல் எண்ணம் 1 வா.சா.ஆ. 2 ஆகும். 3) பிராது தபசில் வீட்டிற்கு வாதி செலுத்திய தீர்வை ரசீது கணிணி நகல் எண்ணம் 7 வா.சா.ஆ. 3 ஆகும். 4) 14.08.2020ம் தேதி பிராது தபசில் வீட்டிற்கு வாதி செலுத்திய மின்கட்டண ரசீதின் அசல் எண்ணம் 1 வா.சா.ஆ. 4 ஆகும். 5)

01.04.2021ம் தேதி வாதி தனக்கு வழக்கறிஞர் மூலம் பிரதிவாதி மற்றும் அவரது மகனுக்கும் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ. 5 ஆகும். 6) மேற்படி அறிவிப்பை பிரதிவாதியும் அவரது மகனும் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை எண்ணம் 2 வா.சா.ஆ. 6 ஆகும். 7) 16.04.2021ம் தேதி பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலம் வாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் நகல் வா.சா.ஆ. 7 ஆகும். 8) 07.04.2021ம் தேதி பிராது தபசில் வீட்டிற்கு வாதிசெலுத்திய தீர்வை ரசீதின் அசல் எண்ணம் 1 வா.சா.ஆ.8 ஆகும். 9) 07.04.2021ம் தேதி பிராது தபசில் வீட்டிற்கு வாதிசெலுத்திய குடிநீர் கட்டண ரசீதின் அசல் எண்ணம் 1 வா.சா.ஆ.9 ஆகும். 10) 22.03.2021ம் தேதி பிராது தபசில் வீட்டிற்கு வாதி செலுத்திய மின்கட்டண ரசீதின் அசல் எண்ணம் 1 வா.சா.ஆ.10 ஆகும்.

**(வாதி தரப்பில் மேலும் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

ஓம்/–S.மனோஜ்குமார்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி.